# விஞ்ஞானிகள் இணைந்து பணியாற்ற வேண்டும்

## டிஆர்டிஓ உற்பத்தி ஒருங்கிணைப்பு பிரிவு இயக்குநர்

**சென்னை,மே15:** நாட்டின் முன்னேற்றத்துக்கு விஞ்ஞானிகள் கூட்டாக இணைந்து பணியாற்ற வேண்டும் என பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் உற்பத்தி ஒருங்கிணைப்பு மற்றும் சேவைகள் தொடர்பு பிரிவின் இயக்குநர் சந்திரிகா கௌசிக் தெரிவித்தார்.

மத்திய தொழில் மற்றும் ஆராய்ச்சிகுழுமத்தின்(சிஎஸ்ஐஆர்) அங்கமான கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சிமையம்(எஸ்இஆர்சி) சார்பில் சென்னை தரமணியில் புதன்கிழமை தேசிய தொழில்நுட்ப தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சந்திரிகா கௌசிக் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு 'கட்டமைப்புப் பொறியியல்-அற்புதங்கள் முதல் அறிவியல் ஆய்வு வரை' என்ற தலைப்பில் பேசியது:

இந்தியாவின் விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளை கௌரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் தேசிய தொழில்நுட்ப தினம் கொண்டாடப்படுகிறது.



சென்னை தரமணியில் உள்ள சிஎஸ்ஐஆர்–எஸ்இஆர்சி நிறுவனம் சார்பில் புதன்கிழமை நடைபெற்ற தேசிய தொழில்நுட்ப தின விழா நிகழ்வில் அந்நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்த பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் உற்பத்தி ஒருங்கிணைப்பு மற்றும் சேவைகள் தொடர்பு பிரிவின் இயக்குநர் சந்திரிகா கௌசிக். உடன் சிஎஸ்ஐஆர்–எஸ்இஆர்சி இயக்குநர் ஆனந்தவள்ளி உள்ளிட்டோர்.

இன்றைய இளைய தலைமுறையினர் இந்தியாவின் அறிவியல் முன்னேற்றத்தில் பெரும்பங்காற்றி வருகின்றனர். 2016 -ஆம் ஆண்டில் நாட்டில் சுமார் 450 புத்தாக்க தொழில் நிறுவனங்கள் மட்டுமே இருந்தன. ஆனால் இது தற்போது 1 லட்சத்துக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

பண்டைய இந்தியாவில் நிர்மாணிக்கப்பட்ட பல்வேறு தனிச்சிறப்பு மிக்க கட்டடங்கள், சிறந்த கட்டடக்கலை தொழில்நுட்பத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதுடன் கடுமையான இயற்கை பேரழிவுகளை தாங்கி அவை இன்றளவும் தலைசிறந்த படைப்புகளாக உள்ளன.

இதில் குறிப்பிடத்தக்க விதமாக மாமல்லபுரம் சிற்பங்கள், தஞ்சை பெரிய கோயில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், கல்லணை, மற்றும் ராமநாதசுவாமி கோயில் போன்றவற்றை தன்னகத்தே கொண்டு தமிழகம் சிறந்த பாரம்பரிய கட்டடகலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

அறிவியல் கண்டுபிடிப்புகள் தனிமனித வாழ்க்கைத்தரம் உயர காரணமாக அமைகின்றன. இயற்கைக்கு உகந்த வகையில் புதுமையான கட்டமைப்பு தொழில்நுட்பங்கள் கண்டறியப்பட வேண்டியது அவசியம். நம் நாடு புதிய கண்டுபிடிப்புகள் மூலம் ஒரு நிலையான, முன்னேற்றகரமான எதிர்காலத்தை அடைவதற்கு விஞ்ஞானிகள் ஒன்றிணைந்து கூட்டாக பணியாற்ற வேண்டும் என்றார் அவர்.

இந்நிகழ்வில் சிஎஸ்ஐஆர்-எஸ்இஆர்சி இயக்குநர் என்.ஆனந்தவள்ளி, முதன்மை விஞ்ஞானிகள் ஜே.ராஜாசங்கர், ஜி.எஸ்.பழனி உள்பட அந்நிறுவனத்தின் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

Dinamani 15 May 2024

# CSIR-Structural Engineering Research Centre (CSIR-SERC) and CSIR Madras Complex celebrates National Technology Day

Posted On: 15 MAY 2024 8:13PM by PIB Chennai

National Technology Day was celebrated with great enthusiasm on 15 May 2024, by CSIR-Structural Engineering Research Centre (CSIR-SERC) and CSIR Madras Complex (CMC).

The function was presided over by Dr. N. Anandavalli, Director, CSIR-SERC and Coordinating Director, CMC. Dr. Chandrika Kaushik, Outstanding Scientist & Director General – Production Coordination & Services Interaction (PC & SI), Defence Research and Development Organization (DRDO), New Delhi, was the Chief Guest of the function. Dr. Anandavalli welcomed all the participants on the eve of the National Technology Day and mentioned that this day is being celebrated since 1999 to mark India's technological prowess. She briefed on the National Technology Day and said that this day is celebrated every year to commemorate India's three significant technological achievements namely, to mark the anniversary of the POKHRAN nuclear tests of 1998, first flight of the indigenously designed HANSA lightweight aircraft and the development of the surface to air missile TRISHUL. Referring to this year's National Technology Day theme - Promoting Clean and Green Technologies for a Sustainable Future, she briefed on the green and sustainable technologies developed by CSIR-SERC and the technological interventions by CSIR-SERC that acted as solutions for complex engineering problems.

Dr. J. Rajasankar, Chief Scientist, CSIR-SERC, introduced the Chief Guest to the audience. Dr. Chandrika Kaushik delivered the National Technology Day lecture on Structures: From Engineering Marvels to Exploratory Science. In her lecture she gave a brief on the genesis of National Technology Day and remembered the achievements of the nation's scientist, engineers and technologists. Referring to this year's theme, she said that the scientific community should collectively work towards achieving a sustainable future. She spoke in detail on the evolution of structures from primitive to skyscrapers, ancient engineering marvels of Tamil Nadu, engineering structures from research community, evolution of structural material, innovation in structural component technologies, trends in architectural process, bio-inspired structures and tough engineering challenges that lie before us. She highlighted that ancient Indian civilization had rich diversity of structures and created many finest architectural masterpieces that withstood even fierce natural disasters. She called upon the scientific community to collaborate meaningfully and harness the expertise of various organizations to create sustainable solutions for betterment of the society.

Dr. G.S. Palani, Chief Scientist, CSIR-SERC, proposed vote of thanks.






*******

AD/DL

(Release ID: 2020731) Visitor Counter : 42

# சிஎஸ்ஐஆர்- கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையம் மற்றும் சிஎஸ்ஐஆர் - மெட்ராஸ் வளாகம் இணைந்து தேசிய தொழில்நுட்ப தினத்தை கொண்டாடின

Posted On: 15 MAY 2024 8:13PM by PIB Chennai

சிஎஸ்ஐஆர் -கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையம் (CSIR-SERC) மற்றும் சிஎஸ்ஐஆர் மெட்ராஸ் வளாகம் (CMC) இணைந்து தேசிய தொழில்நுட்ப தினத்தை மிகுந்த உற்சாகத்துடன் 15 மே 2024 அன்று கொண்டாடின.

விழாவுக்கு சிஎஸ்ஐஆர்-எஸ்இஆர்சி இயக்குநரும், சிஎம்சி ஒருங்கிணைப்பு இயக்குநருமான முனைவர் என். ஆனந்தவல்லி தலைமை வகித்தார். முனைவர் சந்திரிகா கௌசிக், தலைசிறந்த விஞ்ஞானி மற்றும் பொது இயக்குநர் - உற்பத்தி ஒருங்கிணைப்பு மற்றும் சேவைகள் தொடர்பு (PC & SI), பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO), புது தில்லி அவர்கள் விழாவின் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். தேசிய தொழில்நுட்ப தினத்தை முன்னிட்டு அனைத்து பங்கேற்பாளர்களையும் டாக்டர் ஆனந்தவல்லி வரவேற்று, இந்தியாவின் தொழில்நுட்ப வல்லமையைக் குறிக்கும் வகையில் இந்த தினம் 1999 முதல் கொண்டாடப்படுகிறது என்று குறிப்பிட்டார். 1998 ஆம் ஆண்டு போக்ரான் அணு ஆயுத சோதனைகளின் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட ஹன்சா இலகுரக விமானத்தின் முதல் விமானம் மற்றும் மேற்பரப்பில் இருந்து வான் ஏவுகணை திரிசூல் உருவாக்கம் ஆகிய இந்தியாவின் மூன்று குறிப்பிடத்தக்க தொழில்நுட்ப சாதனைகளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது என்று அவர் தேசிய தொழில்நுட்ப தினத்தை விளக்கினார். இந்த ஆண்டின் தேசிய தொழில்நுட்ப தின கருப்பொருளான - நிலையான எதிர்காலத்திற்கான சுத்தமான மற்றும் பசுமையான தொழில்நுட்பங்களை ஊக்குவிப்பது சம்பந்தமாக CSIR-SERC ஆல் உருவாக்கப்பட்ட பசுமை மற்றும் நிலையான தொழில்நுட்பங்கள் மற்றும் சிக்கலான பொறியியல் சிக்கல்களுக்கு தீர்வாக செயல்பட்ட CSIR-SERC இன் தொழில்நுட்ப தலையீடுகள் குறித்து விளக்கினார்.

CSIR-SERC இன் முதன்மை விஞ்ஞானி முனைவர் ஜே. ராஜாசங்கர், தலைமை விருந்தினரை பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்தினார். முனைவர் சந்திரிகா கௌசிக் தேசிய தொழில்நுட்ப தின விரிவுரையை 'கட்டமைப்புகள் பொறியியல் : அற்புதங்கள் முதல் ஆய்வு அறிவியல் வரை' என்ற தலைப்பில் வழங்கினார். அவர் தனது விரிவுரையில் தேசிய தொழில்நுட்ப தினத்தின் தோற்றம் மற்றும் நாட்டின் விஞ்ஞானிகள், பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் சாதனைகளை நினைவுகூர்ந்தார். இந்த ஆண்டின் கருப்பொருளைக் குறிப்பிடுகையில், விஞ்ஞான சமூகம் ஒரு நிலையான எதிர்காலத்தை அடைவதற்கு கூட்டாக பணியாற்ற வேண்டும் என்று கூறினார். பழமையான கட்டிடங்கள் முதல் வானளாவிய கட்டிடங்கள் வரையிலான கட்டமைப்புகளின் பரிணாம வளர்ச்சி, தமிழ்நாட்டின் பண்டைய பொறியியல் அற்புதங்கள், ஆராய்ச்சி சமூகத்தின் பொறியியல் கட்டமைப்புகள், கட்டமைப்பு கூறுகளின் பரிணாமம், கட்டமைப்பு கூறுகளின் தொழில்நுட்பங்களில் புதுமை, கட்டிடக்கலை செயல்முறையின் போக்குகள், இயற்கைக்கு உகந்த கட்டமைப்புகள் மற்றும் கடினமான பொறியியல் மற்றும் நம் முன் இருக்கும் சவால்கள் குறித்து விரிவாகப் பேசினார். பண்டைய இந்திய நாகரிகம் பல்வேறு கட்டமைப்புகளைக் கொண்டிருந்தது மற்றும் கடுமையான இயற்கை பேரழிவுகளையும் தாங்கும் பல சிறந்த கட்டிடக்கலை தலைசிறந்த படைப்புகளை உருவாக்கியது என்பதை அவர் எடுத்துரைத்தார். சமூகத்தின் முன்னேற்றத்திற்கான நிலையான தீர்வுகளை உருவாக்க பல்வேறு நிறுவனங்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி அர்த்தமுள்ள வகையில் ஒத்துழைக்குமாறு விஞ்ஞான சமூகத்தை அவர் அழைப்பு விடுத்தார்.

சிஎஸ்ஐஆர்-எஸ்இஆர்சியின் முதன்மை விஞ்ஞானி முனைவர் ஜி. எஸ். பழனி நன்றியுரை வழங்கினார்.










###